**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும். ஆனால் அந்தந்தப் பகுதி மக்கள் கண்டெடுத்த பொருள்களை அரசாங்கத்திடம் கொண்டுவந்து கொடுக்கிறார்களா என்பதைப் பொறுத்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வினு நேரத்தில் ஓர் அமைச்சரிடம் கேட்ட வினுவிற்கு மற்றோர் அமைச்சர் வினு கேட்ட உறுப்பினரிடமே ஒரு வினு கேட்டது குறித்து.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. In all Parliamentary democratic institutions like the Mother of Parliaments in England, the Lok Sabha and the Rajya Sabha in Delhi and our Tamil Nadu Legislative Assembly, the first hour is set apart for question time. In the question time there is almost a battle of wits between the Ministers and the members who put questions irrespective of the political party to which they belong. It is the prerogative of members to put questions and it is the duty of the Ministers to answer. With due deference to my good Friend Mr. P. U. Shanmugam, I wish to say that he put a question and asked me to answer. I could have answered, but I did not answer because I did not want to spoil the prevailing good spirit. Was the Hon. Minister in order in putting a quetion to me and in my not being allowed to answer? I want a ruling on this.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் மன்றத்திலே கேள்விகள் கேட்பதற்கும், அமைச்சர்கள் பதில் அளிப்பதற்கும் உரிமை இருக்கிறது. அமைச்சர்கள் பதில் சொல்லும்போது சில நேரங்களில் பதில் கூட கேள்வி ரூபத்திலே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். Even the answers can be in the form of questions.

THIRU K. VINAYAKAM : The question was addressed to the Education Minister and it is the Education Minister who has got to answer me, or put a question by way of answer.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள், அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதை உணருவார்கள். சில சமயத்தில் திரு. வினயகம் அவர்கள் செய்யக் கூடிய தவறுகளையும் சுட்டிக்காட்டக்கூடிய பொறுப்பு இருக்கிறது. கல்வி, மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள கூட்டுப் பொறுப்பில் உள்ளது என்று சொல்லுகிறார்கள். மாநில சர்க்காருடைய அதிகாரத்தில் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.